[பேரவைத் தலைவர்][2022 அக்டோபர் 17

(V) திரு. கோடியேரி பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் மூத்த தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சி.பி.ஐ.(எம்.) கட்சியின் தலைமைக் குழு உறுப்பினரும், மூன்று முறை அக்கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. கோடியேரி பாலகிருஷ்ணன் அவர்கள் 1–10–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

கொள்கை உறுதிமிக்க தலைவராக விளங்கிய தோழர் கோடியேரி பாலகிருஷ்ணன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது மிசா சட்டத்தின்கீழ் சிறை தண்டனை அனுபவித்தவர். மேலும், அவர் கேரள மாநிலத்தின் அமைச்சராகவும் சிறப்புறப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(Vi) திரு. முலாயம் சிங், உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும், சமாஜ்வாடி கட்சியின் மூத்த தலைவருமான திரு. முலாயம் சிங் யாதவ் அவர்கள் 10–10–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இந்திய அரசியலில் முதுபெரும் தலைவர்களில் ஒருவரான திரு. முலாயம் சிங் யாதவ் அவர்கள் 3 முறை உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராகவும், 10 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 7 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் மற்றும் ஒன்றிய அமைச்சராகவும் பணியாற்றியவர். மதச்சார்பற்ற கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டிற்காக போராடிய மிக உயர்ந்த தலைவர்களில் ஒருவராவார்.

2022 அக்டோபர் 17] [பேரவைத் தலைவர்]

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சமாஜ்வாடி கட்சியினருக்கும், இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10–10

(ஆ) திரு. சேடபட்டி இரா. முத்தையா, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் 21–9–2022 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

அன்புடன் பழகும் பண்பையும், அனைவரிடமும் எளிமையோடு பழகும் பாங்கையும் தன்னகத்தே கொண்ட திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் 1977–1980, 1980–1984, 1985–1988 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் சேடபட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1991–1996 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றி அனைவரது பாராட்டுதலையும் பெற்றவர். மேலும், 1989–1991 மற்றும் 1998–1999 ஆகிய ஆண்டுகளில் பெரியகுளம் மக்களவைத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1998 ஆம் ஆண்டில் ஒன்றிய அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.